# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 46/2015

Deposition of Witness : PW-1

Name : ஜெகஜோதி

Father's Name /W/o : க/பெ. நாகப்பன்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : ஆட்டுப்பாக்கம் கிராமம், அரக்கோணம் வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 18.12.2023

குறுக்கு விசாரணை: (பிரதிவாதிகள் 2 முதல் 4 தரப்பில்)

1. எனது பூர்வீகம் எந்த ஊர் என்றால் காஞ்சிபுரம் வட்டம் காரை கிராமம். வா.ச.ஆ.1 ல் 12.12.1980 முதல் நாகப்பன் வீட்டில் தங்கி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையா பொய்யா என்றால் நான் அவர் வீட்டில் தங்கவில்லை. நான் அவர் வீட்டில் இல்லை. வா.சா.ஆ.1 ல் நிறைய அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் எனக்கும் நாகப்பனுக்கும் நடந்த திருமணத்தை உறுதிப்படுத்தாது என்றால் சரியல்ல. திருமணம் ஆனது உண்மைதான். வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்காக பொய்யாகவும் ரயில்வே பென்சனை பெற வேண்டும் என்பதற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் இல்லை. நாகப்பன் எங்கு வேலை செய்தார் என்றால் ரயில்வேயில் வேலை செய்தார். நாகப்பன் எப்போது ஓய்வு பெற்றார் என்றால் ஜீன் 2005 ல் ஓய்வு பெற்றார். ரயில்வேயில் பணி செய்யும்போது குடும்ப உறுப்பினர்கள் பெயரை கொடுக்கவேண்டும் என்றாலும் அதில் வாதிகள்

1, 3 மற்றும் 4 ஆகியோரின் பெயரை மற்றும் தான் குறிப்பிட்டுள்ளார் என்றாலும் தினேஷ்குமார் பெயர் குறிப்பிடவில்லை என்றால் அந்த சமயத்தில் தினேஷ்குமார் ஊருக்கு போனதால் குறிப்பிடவில்லை.

2. நாகப்பன் ஓய்வு பெறுவதற்கு முன்பே 1ம் பிரதிவாதி முனியம்மாள் அவர்தான் நாகப்பன் மனைவி என்று ரயில்வேக்கு ஒரு மனுவை கொடுத்திருந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி முனியம்மாள் ரயில்வே நிர்வாகத்திற்கு 29.06.2005 மற்றும் 30.06.2005 மூலம் தந்தி அனுப்பியிருந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி முனியம்மாள் தடை தெரிவித்ததால் அவருக்கு ஓய்வு ஊதியம் மொத்த பலன்கள் கொடுக்காமல் பிராவிடன்ட் பண்ட் மற்றும் குரூப் இன்சூரன்ஸ் தொகையாக ரூ.10285 மட்டும் தான் கொடுக்கப்பட்டது என்றால் ஆம். நாகப்பன் ஓய்வு பெற்ற மறுநாள் அவருக்கு மாத பென்சனாக ரூ.1975 மட்டும் கொடுக்கப்பட்டது என்றால் ஆம். நாகப்பன் பணி ஓய்வு பெறுவதற்கு முன்பு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை விசாரணை நடைப்பெற்றதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி முனியம்மாள் தனியாக அசல் வழக்கு எண்.120/2005 தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் தாவாவில் நான் அந்த வழக்கை பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் தற்போது தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. அசல் வழக்கு எண்.120/2005 முனியம்மாள் தான் நாகப்பனின் மனைவி என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. முனியம்மாள் நாகப்பனின் மனைவி என்று எம்.சி.1/1993 வழக்கு தாக்கல் செய்து அதில் உத்தரவு பெற்றுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எம்.சி.1/1993 வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அரக்கோணத்தில் நடைப்பெற்றது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நாகப்பனின் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் முனியம்மாள் தான் அவரது சட்டபூர்வமான மனைவி என்று முடிவானது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஒழுங்கு

நடவடிக்கை விசாரணையில் 1ம் பிரதிவாதியை திருமணம் செய்துக்கொண்டதாக ஒத்துக்கொண்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேலும் அந்த விசாரணையில் 1ம் பிரதிவாதி முனியம்மாளை விவாகரத்து செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த ஒழுங்கு நடவடிக்கை முடிவானது குடியரசு தலைவருக்கு அனுப்பட்டு நாகப்பனுக்கு தண்டனையாக கிராஜிவிட்டு தொகை நிறுத்தப்பட்டு மற்ற தொகைகள் வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

4. என் கணவருக்கு முழு பென்சன் வந்ததா அல்லது குறைவாக வந்ததா என்றால் ரூ.5000 தான் வந்தது. ஒழுங்கு நடவடிக்கை உத்தரவில் குறைவான பென்சன் தான் வழங்கவேண்டும் என்று உத்தரவானது என்றாலும் அதை நாகப்பனும் ஏற்றுக்கொண்டார் என்றால் அவர் எவ்வளவு வாங்கினார் என்று எனக்கு தெரியாது. அந்த உத்தரவின் மீது மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த ஒழுங்கு நடவடிக்கையில் வாதியின் பெயர்களை தவறாக கொடுத்ததாக ஒப்புக்கொண்டார் என்றால் அது தவறாக இருந்தால் எனக்கு பென்சன் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. நாகப்பன் எப்போது இறந்தார் என்றால் 21.12.2012 ல் இறந்தார். அவர் இறந்த பிறகு அவர் சட்டப்படியான மனைவி என்ற முறையில் 1ம் பிரதிவாதி முனியம்மாள்தான் பென்சன் வாங்கினார் என்றால் இல்லை நான் தான் வாங்கினேன். நான் தான் பென்சன் வாங்கினேன் என்று ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தான் பென்சன் வாங்கினேன் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். ரயில்வே நிர்வாகத்திடம் கொடுத்துள்ள அசல் வழக்கு எண். 120/2005 தீர்ப்பும் மற்றும் எம்.சி.1/1993 தீர்ப்பின் படியும் 1ம் பிரதிவாதி முனியம்மாள் தான் சட்டப்படியான மனைவி என்று அவருக்கு ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நாகப்பனுக்கு 1ம் பிரதிவாதியுடன் 1975 ல் திருமணம் நடந்த

இதுவரையில் திருமணம் ரத்தாகவில்லை என்றால் சரியல்ல. நான் தான் மனைவி. என் தாவாவில் 1981 முதல் நான் அவருடன் வாழ்வதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம். நான் நாகப்பனின் சட்டப்படியான மனைவி கிடையாது என்றால் சரியல்ல இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.